2018 மே 30]

இருக்கின்ற காரணத்தினாலே, அவசியம் அந்தப் பேருந்தை அங்கு இயக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கர்நாடகா மற்றும் தமிழகத்திற்கும் இடையேயான வழித்தடங்களிலே பேருந்தினை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களும், கொடுத்திருக்கின்ற அந்த வழித் தடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருங்காலங்களில் அந்தப் புதிய வழித்தடங்களில், குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து வரும். அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின், அதற்கு மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, அவர் கூறிய வழித்தடங்களில் பேருந்தினை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

தங்கும் விடுதி

***6372—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணி அம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மே 30

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து, மறைந்தும் மறையாமலும் நம் நெஞ் சங்களில் குடியிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அரசை தமிழகத்தில் மிகவும் பொலிவோடும், ஏற்றத்தோடும் நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் அவருக்குத் துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி எனது விடையை இம்மன்றத்தில் பதிவு செய்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணி அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.54,43,011/- மதிப்பீட்டில் பக்தர்கள் ஓய்வு மண்டபமும், திருக்கோயில் நிதியிலிருந்து 53,50,167/- மதிப்பீட்டில் Calvo Iron Sheet *கூரையிலான பக்தர்கள் ஓய்வு மண்டபமும், உபயதாரர் நிதியிலிருந்து ரூ.33,40,000/- மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் மண்டபமும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில், பக்தர்கள் பயன்படுத்துவதற்காக கூடுதலாகத் தங்கும் விடுதி வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, தேவை ஏற்படின், அதற்குரிய நிதி ஆதாரத்தைத் திரட்டி தங்கும் விடுதி கட்டுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மாவின் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களின் மனதில் மட்டுமல்லாது, அனைத்துத் தரப்பு மக்களின் மனதிலும் தெய்வமாக வீற்றிருந்து எங்களுடைய அனைவரின் வாழ்க்கையிலும் ஒளி விளக்கேற்றிச்*

2018 மே 30]

சென்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா வழியிலே நல்லாட்சி நடத்தி வருகின்ற, மக்களின் கோரிக்கைகளை ஏற்று ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று அவற்றை உடனடியாக நிறைவேற்றித் தருகின்ற எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

வால்பாறை தொகுதியில், ஆனைமலை ஒன்றியத்தில் உள்ள மாசாணி அம்மன் கோயில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாகும். ஆண்டுதோறும் தை மாதம் அமாவாசை அன்று கொடியேற்றி சிறப்பாக குண்டம் திருவிழா நடைபெறுகின்ற கோயில் அது. தினந்தோறும் பல பகுதிகளிலிருந்து அதிக பக்தர்கள் வருகின்ற கோயில் அது. மாதாமாதம் அமாவாசை அன்று சிறப்பு இரயில்கள்கூட மதுரையிலிருந்து விடப்படுகின்றன. எனவே, அங்கு வருகின்ற பக்தர்களின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையான தங்கும் விடுதி கட்டுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*